புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், வயலோகம் அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.ராம்கணேஷ், ஒன்றிய குழுத் தலைவர் வி.ராமசாமி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

மாற்றுத்திறனாளிகள் மொத்த எண்ணிக்கையை அறிய நடவடிக்கை எடுப்பீர்!

ஒன்றிய அரசுக்கு தி.மு.க. எம்.பி. தமிழச்சி தங்கபாண்டியன் கடிதம்!

புதுடெல்லி, ஜூன் 26-

நமது நாட்டில் உள்ள மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கையைச் சரிவர கணக்கிடாத காரணத்தால் அவர்களைப் பற்றிய முழு விவரத்தை அறிய இயலவில்லை. எனவே மாற்றுத்திறனாளிகள் மொத்த எண்ணிக்கையை அறிய உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு திராவிட முன்னேற்றக் கழக மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவுக்கு கடந்த 18 ஆம் தேதி தமிழச்சி தங்கபாண்டியன் அனுப்பியுள்ள கடித விவரம்.

நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை சதவீதம் அதிகரிக்கும் விஷயம் குறித்து நீங்கள் அரசியல்வாதி என்ற முறையிலும் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் என்ற வகையிலும் முழுமையாக அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

உலக சுகாதார அமைப்பின் (டபிள்யு.எச்.ஓ.) ஆய்வறிக்கையின்படி நமது நாட்டின் மொத்த மக்கள் தொகையில் அதிகபட்சம் 15 சதவீதம் பேர் மாற்றுத்திறனாளிகள் எனத் தெரிய வந்துள்ளது. ஆனால் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை கணக்கெடுப்பில் உள்ள பல்வேறு குறைபாடுகள் காரணமாக முழுமையான மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை விவரம் துல்லியமாகக் குறிப்பிடப்படவில்லை.

மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கையை முழுமையாகக் கண்டறிய பல்வேறு உலக நாடுகளும் ஐக்கிய நாடுகள் அமைப்பும் மற்றும் இது தொடர்பான சர்வதேச அமைப்புகளும் நவீன உபகரணங்கள் மற்றும் அணுகுமுறைகளைப் பயன்படுத்தி ஆய்வுப் பணிகளை விரிவுபடுத்தி வருகின்றன.

ஆனால் நமது நாட்டின் தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பு (என்.எப்.எச்.எஸ்.6) நடப்பு ஆண்டு ஜூலை மாதம் முதல் துவங்க உள்ள மாற்றுத்திறனாளிகள் கணக்கெடுப்பில் இது தொடர்பான வினாக்களைத் தவிர்த்துள்ளது துரதிஷ்டமானது.

தற்போது கிடைத்துள்ள ஆய்வறிக்கைப் புள்ளி விவரங்களின்படி ஏழு வகையான மாற்றுத்திறனாளிகள் இடம்பெற்றுள்ளனர். ஆனால் சரியான, முறையான புள்ளிவிவரக் கணக்கெடுப்பு இல்லாத காரணத்தால் மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை குறைவாக மதிப்பிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளது. இதனால் மாற்றுத்திறனாளிகள் பற்றிய துல்லியமான புள்ளி விவரம் கிடைக்காதது மிகப்பெரும் குறைபாடாகும். மாற்றுத்திறனாளிகள் தொடர்பான அரசின் கொள்கை முடிவுகளில் இதனால் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேகமான தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமானால் அவர்களைப் பற்றிய முழுமையான கணக்கெடுப்பும் முழுமையான அளவில் அவர்களைப் பற்றிய விவரங்களையும் சேகரிக்க வேண்டியது அவசியமாகும்.

இத்தகைய சூழ்நிலையில் தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பின் (என்.எப்.எச்.எஸ்.6) கணக்கெடுப்பில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான வினாக்களை நீக்கி இருப்பது மாற்றுத்திறனாளிகளின் அடிப்படை உரிமைகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாகும்.

மாற்றுத்திறனாளிகளின் நல்வாழ்வுக்காக ஒன்றிய அரசு வகுக்கும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு தேசிய குடும்ப நல ஆய்வு அமைப்பபின் ஆய்வு விவரங்கள் பெரும் துணையாக இருந்து வருகின்றன. மேலும் ஆரம்ப மற்றும் இடைநிலை சுகாதார நல்வாழ்வு அளவிலும் சுகாதார திட்டங்கள் செயல்பாட்டிலும் இந்த புள்ளி விவரங்கள் மிகவும் பயனுள்ளதாக இருந்து வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் தேசிய குடும்ப நலை ஆய்வில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான வினாக்களைத் தவிர்த்து இருப்பது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் மாற்றுத்திறனாளிகளுக்குச் செயல்படுத்தப்பட்டுவரும் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதுடன் எதிர்மறையான விளைவுகளையும் உருவாக்கி விடும். அதற்கும் ஒருபடி மேலாக மாற்றுத்திறனாளிகள் நல்வாழ்வுச் சட்டத்தின் முக்கிய குறிக்கோளையே தோல்வி அடையச் செய்துவிடும்.

ஆகவே மேலே குறிப்பிட்ட விஷயங்கள் தொடர்பாக உரிய விளக்கங்களை விரைவில் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இது தொடர்பான விஷயத்தில் உடனடியாக திருத்தம் மேற்கொண்டு செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், மறமடக்கி அரசு மேல்நிலைப்பள்ளியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, இலவச பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாமினை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் துவக்கி வைத்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்ட அட்டைகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, வருவாய் கோட்டாட்சியர் சு.சொர்ணராஜ், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.நமச்சிவாயம், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி, சண்முநாதன், வட்டார மருத்துவ அலுவர் மரு.முகமது இந்தியாஸ், வட்டாட்சியர் (ச.பா.தி.) திருமதி.பரணி, ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி.ராஜமனோகரி ரவி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சொ. துரைசண்முகம்
ஜூன் 26 (2014)

இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழக உறுப்பினரானார்.

அப்போதைய செங்கல்பட்டு மாவட்ட பிரதிநிதியாகவும், திருவான்மியூர் வட்டக் கழகப் பொறுப்பாளராகவும், கழக நிர்வாகத்தில் திருவான்மியூர் சென்னை மாநகர் மாவட்டத்திற்கு வந்தபோது பொதுக்குழு உறுப்பினராகவும், வேளச்சேரி பகுதிக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

அந்தரத்தில் தொங்கும் இந்திய மக்களாட்சி!

நாட்டில் இன்று நாம் அனுபவித்து வரும் ஜனநாயகப் பற்றாக்குறையைப் பற்றிய கவலையை மூழ்கடித்துவிட்டு, தொகுதிகள் மறுவரையறை என்னும் பெயரால் இந்தி vs இந்தி அல்லாதார், வடக்கு vs தெற்கு என்று இன்னும் பலவாறு மக்களைப் பிளவுபடுத்தி இந்தியர்களையே ஒருவர் மீது இன்னொருவரை ஏவும் ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தியத் தொகுதிகள் சீரமைப்பு ஆணையத்திற்கு இரண்டு முக்கியமான பணிகள் உள்ளன. ஒன்று, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளை மறுவரையறை செய்வது. இரண்டாவது அரசமைப்புச் சட்டத்தின் 82 வது பிரிவின்படி அனைத்து மாநிலங்களின் மக்கள்தொகை விகிதங்களுக்கு ஏற்ப, ஒவ்வொரு மக்கள்தொகை கணக்கெடுப்பிற்குப் பிறகும் ஒரு மாநிலத்திற்குரிய மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை மறுசீரமைக்க வேண்டும்.

இதில் இரண்டாவது செயல்பாடு அவசரநிலைக்குப் பிறகு கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாகச் செயலற்று விடப்பட்டது. கடைசியாக 1971 மக்கள் தொகை கணக்கெடுப் பிற்குப் பிறகு தொகுதிகளின் எண்ணிக்கை மறுவரையறுக்கப்பட்டது. 1971 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தான் நிதி ஆணையமும் நிதி ஒதுக்கீடு செய்கிறது. 1976 ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் இந்திரா காந்தி, 2001 ஆம் ஆண்டு வரை 25 ஆண்டுகளுக்குத் தொகுதிகள் எண்ணிக்கை மறுவரையறை செய்யப்படுவதை நிறுத்தி வைத்தார்.

2002ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 84வது அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின்படி, நீட்டிக்கப்பட்ட இந்தத் தற்காலிக ஒத்திவைப்பானது 2026இல் காலாவதி ஆகிறது. அடுத்துச் செய்யப்படவுள்ள தொகுதிகள் மறு வரையறை நாட்டின் அத்தனை மாநிலங்களின் மீது குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தும். ஆனால் அந்த மாற்றங்கள் நாட்டின் முழுமையான ஜனநாயக நலன்களைக் கருத்தில் கொண்டதாக இருக்க வேண்டு மென்றால் நடைமுறைக்கு ஒத்ததாகவும், பகுத்தறிவுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

கொள்கைகளும் கவலைகளும்:

சில அடிப்படைக் கொள்கைகள் முதலில் தெளிவுபடுத்தப்பட வேண்டியுள்ளன.

முதலில், தேசிய வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பு என்னும் பெயரால், ஒன்றுபட்ட குறிக்கோள் என்னும் பெயரால் செயல்திறன் மிக்க மாநிலங்கள், கீழ் நோக்கி இழுக்கப்படுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். குறைவான மக்கள்தொகைப் பெருக்க விகிதத்தாலும் மனிதவளத்தினைக் கருத்தில் கொண்ட செறிவான முதலீட்டாலும் உந்தப்பட்ட, பொருளாதார உற்பத்தி மிகுந்த மாநிலங்கள் தான் உலக அளவில் இந்தியாவை உண்மையான ஆற்றல் மையமாக முன்னிறுத்துவதில் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்தியாவின் வளம்மிக்க மூன்று மாநிலங்களான மகாராஷ்டிரா, தமிழ்நாடு மற்றும் குஜராத் ஆகியவை, இந்தியாவின் வளம் குறைந்த மூன்று மாநிலங்களைவிட மூன்றுமடங்கு வளமானவை. இம்மூன்று மாநிலங்களும் தொலைநோக்கு உடையதாகவும் மக்கள்தொகைக் கட்டுப்பாட்டினைச் செம்மையாக மேற்கொண்டவையாகவும் உள்ளன.

சேலம் தரணிதரன்
மாநில துணைச் செயலாளர்
தகவல் தொழில்நுட்ப அணி

வெற்றிகரமாக மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் மாநிலங்களே பொருளாதார வலிமை, புத்தாக்கத்தின் தரம் மற்றும் முதலீடுகளை ஈர்க்கும் திறன் கொண்டவையாக இருக்கின்றன. வி.வெங்கடேசன் 2001ஆம் ஆண்டு 'தி இந்து' நாளேட்டில் எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டதைப் போல, குடும்பக் கட்டுப்பாடு மற்றும் மக்கள்தொகை வளர்ச்சி விகிதங்களைக் கட்டுப்படுத்திச் சிறப்பான செயல்பாடுகளைக் கொண்ட மாநிலங்கள் தண்டிக்கப்படாமல் இருப்பதையும் ஊக்குவிக்கப்படுவதையும் உறுதி செய்வதற்காகவே அரசமைப்புச் சட்டத்தின் தொண்ணூற்று ஒன்றாவது திருத்த மசோதா அமல்படுத்தப்பட்டது.

இந்திய ஜனநாயகம் நிலையாகத் தழைத்தோங்க வேண்டுமென்றால், பொதுக் கொள்கைகளின் மூலம் செய்யப்படும் ஊக்குவிப்பு வழிமுறைகளை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டாவது கவலை, நேர்மை தொடர்பானது. அனைவருக்கும் ஒற்றை அளவுகோல் என்னும் நிலை நேர்மையானதாகத் தோன்றலாம்; ஆனால் ஜனநாயகத்திற்கு அது போதாமையை ஏற்படுத்துகின்றது. இந்திய அரசியல் கட்டமைப்பானது பொருளாதார ரீதியாக வளர்ந்த மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தென்னிந்திய மாநிலங்களுக்கு எதிரானதாக இருக்கின்றது. இந்திய மக்கள் தொகையில் 21% மக்களைக் கொண்ட தென்னிந்திய மாநிலங்கள், நாட்டின் மொத்தப் பொருளாதார உற்பத்தியில் 30% பங்களிப்பைச் செய்கின்றன. மகாராஷ்டிரா, குஜராத், ஹரியானா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள், 2016-2017 நிதியாண்டில் ஒவ்வொன்றும் ஒன்றியத்தின் வளர்ச்சிக்கு அளித்த 100 ரூபாயில் 30 ரூபாயை மட்டுமே திரும்பப்பெற்றன. பிஹார் மற்றும் உத்தரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 150 வரை திரும்பப் பெற்றன. ஆனால் டிஜிட்டலைசேஷன் மற்றும் நவீனத்துவ வேளாண்மை மூலமாக இந்தியப் பொருளாதாரத்தினை முன்னோக்கி நகர்த்துவதில் சிங்கத்தின் பங்கை வழங்கும் மாநிலங்களுக்குத் தேவையான மறுபங்கீட்டை வழங்க எந்தச் சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையில், இந்தக் காலகட்டத்தில் செய்யப்படும் தொகுதிகள் மறுவரையறை, இந்த நாட்டின் நிதி மற்றும் வரி விதிப்பு முறையின் நேர்மையைக் கேள்விக்கு உள்ளாக்குகிறது. மேலும் ஏற்கனவே அதிகரித்துள்ள ஏற்றத்தாழ்வுகளை மேலும் அதிகரிக்கும். கடின உழைப்பு, நிகர பயன்பாடு மற்றும் பொருளாதார உற்பத்தித் திறன் ஆகியவற்றை நியாயத்தின் கருவிகளாக மதிப்பளித்து மக்களாட்சி நடக்கிறதென்றால், தொகுதிகள் மறுவரையறை என்பது நடைமுறைச் சாத்தியமுள்ள முன்மொழிவு தானா என்பதைத் தீர ஆய்வு செய்ய வேண்டும்.

மூன்றாவது பரிசீலனை மாநில நலன்கள் மற்றும் மக்களினக் குழுக்களின் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தைப் பற்றியது. இவையே இந்திய ஜனநாயக இயக்கத்தின் அடிப்படையாகின்றன. தொகுதிகள் எண்ணிக்கை மறுசீரமைக்கப்பட்டால் 120 மக்களவை உறுப்பினர்கள் கொண்ட உத்தரபிரதேசம் மற்றும் பிஹார் 222 உறுப்பினர்களைப் பெறும் என்றும் 129 இடங்களைக் கொண்ட 5 தென்னிந்திய மாநிலங்களுக்கும் மொத்தமாக 165 இடங்களைப் பெறும் என்றும் சில மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. கடந்த சகாப்தங்களில் மக்கள்தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் அதிக செயல்திறன் மிக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட மாநிலங்களுக்கான இடப்பங்கீடு குறைக்கப்பட்டது தான் ஒட்டுமொத்த முடிவு.

இன்னும் குறிப்பாகச் சொல்லுவதென்றால், பி.ஜே.பி. ஆதிக்கம் செலுத்தும் மாநிலங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்கள் விகிதம் தற்போது 40%இல் இருந்து 51% ஆக அதிகரிக்கும், அதே நேரத்தில் தெற்கில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் சதவீதம் 25% லிருந்து 18% ஆக குறையும்.

இந்த கட்டுரையின் ஆசிரியர்கள், இது நியாயமற்ற உள்நோக்கம் கொண்டது அல்லது நடைமுறை ரீதியாக அநீதியானது என்கின்ற பொதுவான வர்ணனைகளில் மட்டுமே முழுமையாக உடன்படவில்லை. நாட்டின் பல பகுதிகளிலும் பி.ஜே.பி.க்கு இருக்கின்ற குறிப்பிடத் தக்க ஆதரவின் அளவினை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் அந்த ஆதரவு பி.ஜே.பி.க்கு ஆதரவாக இல்லாத மாநிலங்களின் நலன்கள், விருப்பங்கள் மற்றும் கொள்கைகளுக்கு எதிரானதாக இருக்கின்றது. வடக்கோ தெற்கோ இரண்டும் முக்கியம். நீண்ட கால அளவிலான அரசியல் நிலைப்புறுதிக்கு வலுவான பிராந்தியப் பிரதிநிதித்துவம் முக்கியமானது.

தொகுதிகள் எண்ணிக்கை மறுவரையறை செய்யப்படாவிட்டால், மக்களவையில் ஒவ்வொரு தொகுதியையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களின் சராசரி எண்ணிக்கை மாநிலங்கள் அளவில் வெகுவாக மாறுபடும், இதனால் பிரதிநிதித்துவத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படும், என்பதைப் பொதுவான சிக்கலாக முன்வைக்கின்றனர். ஆனால் மக்கள் அனைவரும் சமமானவர்கள் இல்லையா?

ஒரு அடிப்படைச் சிக்கல்

பெரும்பான்மை பெற்றவர் வெற்றி பெறுவார் (First Past the Post FPTP) என்னும் இந்தியத் தேர்தல் அமைப்பின் அடிப்படையிலேயே உள்ள மேலாதிக்கம், மாநில அளவில், வெற்றிக்காக எதையும் செய்யக்கூடிய ஆரோக்கியமற்ற அரசியலை உருவாக்குகிறது. தொகுதிகள் எண்ணிக்கை மறுவரையறை குறித்து மட்டுமே பேசுவது இந்திய ஜனநாயகத்தை நீண்டகாலமாகப் பீடித்துள்ள இந்த அடிப்படைச் சிக்கலை மறைக்கின்றது. FPTP முறை, பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கின்ற கட்சியைச் சேராத வேட்பாளர்களுக்கு ஒவ்வொரு தொகுதியிலும் வாக்களிக்கும் அனைவரையும் அவர்களைக் குரலற்றவர்களாக மாற்று கின்றது. அதாவது, ஒரு தொகுதியில் 30% வாக்குகளைக் கொண்ட ஒரு கட்சி, 4 முதல் 5 கட்சிகளுக்கு இடையே பிளவுபட்ட மீதமுள்ள 70% வாக்காளர்களை கருத்தில் கொள்ளாமலேயே, ஒற்றைப் பெரும்பான்மை அடிப்படையில் ஆட்சி அமைப்பதற்கான உரிமையைப் பெற முடியும்.

சிறிய அல்லது நடுத்தர அளவிலான, இனக்குழுக்களிடையே சிக்கலற்ற, கிட்டத்தட்ட ஒற்றைத் தேசிய இனத்தை நாடுகளில், பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றோருக்கே ஆட்சி என்னும் FPTP முறை சிறப்பாகச் செயல்படும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆனால் இந்தியா போன்ற பல்வேறு தேசிய இனக்குழுக்களைக் கொண்ட நாட்டில், ஜனநாயகத்தை ஆரோக்கியமானதாகவும் செழித்தோங்குவதாகவும் பாதுகாத்திட, மக்களின் குரலை சாதி, மதம், இனம், பண்பாடு என்ற எந்தப் பாகுபாடும் காட்டாமல் பொறுப்புடன் விகிதாசார ரீதியாகப் பிரதிநிதித்து வப்படுத்தும் தேர்தல் முறையே செயல்படக்கூடியதாகும்.

தொகுதிகள் மறுவரையறை மாநிலங்கள் மற்றும் பிராந்தியங்களுக்கு இடையிலான வேறுபாடுகளை அதிகப்படுத்துவது மட்டுமல்லாமல், இன்று நாம் அனுபவிக்கும் அடிப்படை ஜனநாயகப் பற்றாக்குறையின் வேர்களையும் மறைத்துவிடும். இது, இந்தி பேசுவோர் மற்றும் தத்தமது தாய்மொழிகளில் பேசுவோர், வடக்கு மற்றும் தெற்கு என்று இன்னும் எண்ணற்ற வகைகளில் இந்தியர்களையே ஒருவருக்கொருவர் எதிரானவர்களாக மாற்றுகின்றது.

பல்வேறு தேசிய இனக்குழுக்களைக் கொண்ட, பரந்த நோக்குடைய, அன்பைப் பகிர்ந்தளிக்கும் கோட்பாட்டளவிலான இந்திய அடையாளத்தின் கீழ் இந்தியக் குடிமக்களாக இணைந்திருக்கும் மக்களிடையே தேவையற்றுக் கிளறப்படுகின்ற வரலாற்றுக் காயங்களும் கருத்தியல் மோதல்களும் பெரும் பிளவை உண்டாக்குகின்றது.

வெவ்வேறு மாநிலங்களுக்கும் நகரங்களுக்கும் ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையின் மீதான முடிவுற்ற பயனுமற்ற மோதல்களாலும் ஏற்றத்தாழ்வுகளாலும் ஏற்படும் நிலையாமையை இந்தியா தவிர்க்க வேண்டும். ஒன்றிய அரசு மக்களுக்கு பதில் சொல்லும் பொறுப்புணர்ந்து செயல்படுவதன் மூலம், வளமான மாநிலங்களுக்கும் பிற மாநிலங்களுக்கும் இடையிலான ஒத்திசைவையும் உறவையும் மேம்படுத்துவதன் மூலம், வாக்காளர்கள் மீது மட்டுமீறிய சுமைகளையோ கட்டுப்பாடுகளையோ திணிக்காமல் இருப்பதன் மூலம், இந்தியா இன்னும் சிறப்பாகச் செயல்பட முடியும்.

திருப்பூர் காதர்பேட்டை பனியன் பஜாரில் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 51 கடைகளின் உரிமையாளர்களுக்கு ஆறுதலாக தனது சொந்த நிதியிலிருந்து ஒரு கடைக்கு ரூ. 50 ஆயிரம் வீதம் 51 கடைகளுக்கு ரூ.25 இலட்சத்து 50 ஆயிரம் ரொக்க பணத்தை திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டக் கழக செயலாளர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் திருப்பூர் தெற்கு மாநகரக் கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், மாநகராட்சி துணை ரா.பாலசுப்பிரமணியன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.